**வெலிகேபொல பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

--------------------------

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

---------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூன் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

----------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, வெலிகேபொல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

------------------------------------------------------------

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

--------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மீளமைக்கப்பட்ட உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் மீதியான ரூபா 18,156,266 தொகையும் நிலுவை வட்டியான ரூபா 4,681,381 தொகையான ரூபா 22,837,647 கூட்டுத்தொகையான திரண்ட நிதியக் கணக்கு வரவு வைக்கப்பட்டு, கடன் தொகைக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் திரண்ட நிதியக் கணக்கு வரவு மீதியைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கு உரித்தான ரூபா 303,383 கூட்டுத்தொகை உரிய செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது எதிர்வரும் ஆண்டின் செலவினத் தலைப்பினூடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மேற்குறித்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கு உரித்தான நிர்மாணிப்புக் கைத்தொழில் கடன்கொடுத்தோருக்காக ரூபா 4,888,374 தொகை ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,891,410 தொகையான போதிலும், பட்டியலிடலாக ரூபா 2,020,118 காண்பிக்கப்பட்டமையால் அவ் வருமானம் ரூபா 128,708 ஆல் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்கு உரித்தாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுப்பாட்டுக் கணக்கின் படியான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,061,740 தொகையானதுடன் பட்டோலைகளின் படியான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,050,738 தொகையானமையால் அவ் வேறுபாடு ரூபா 11,002 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2009 மார்ச் 09 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஓபநாயக்க பொது சந்தைக்கு அருகாமையில் சபைக்கு உரித்தான 08 கடைகளுக்கு உரித்தான தரப்பினருடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்படாது 1996 ஆம் ஆண்டு முதல் குத்தகைக்கிடப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம்

----------------------------------------

(i) நிதிப்பிரமாணம் இலக்கம் 371

1988 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் ரூபா 2,371,861 கூட்டுத்தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு அல்லது தீர்க்கப்படாத முற்பணம் தொடர்பாக குறித்த விபரம் கண்டறியப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் இலக்கம் 570, 571மற்றும் 572

1978 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 532,005 தொகையான வைப்புக்கள் தொடர்பாக பிரமாணத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இடர் முகாமைத்துவ அமைச்சுச் சுற்றறிக்கை இல. ஜா.கொ.ப.ச 2011/1

மண்சரிவு அபாயத்துடனான மாவட்டங்களில் யாதேனும் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட முன்னர் குறித்த பிரதேச சபையால் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பால் குறித்த யோக்கியதை சான்றிதழ்∴ பரிந்துரை பெற்றுக்கொள்வது கட்டாயமாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தின் 20 கட்டிடத் திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது திட்டக் குழுவின் தீர்மானமின்றி தலைவரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், நிர்மாணிப்புகள் பூர்த்தியானதை அடுத்து இணக்கச் சான்றிதழ் வழங்கப்படுகையில் குறித்த பரிந்துரை செயற்படுத்தப்பட்டுள்ளதா என கவனத்திற்குக் கொண்டுவருவது கட்டாயமான போதிலும், அத்தகைய நடைமுறை சபையால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,305,066 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,784,070 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளின் மிகை ரூபா 479,004 இனால் குறைவடைந்திருந்தது. இது 12.65 சதவீத குறைவென்பது அவதானிக்கப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மீண்டெழும் செலவினங்களின் அதிகரிப்பும், வீத வரி வருமானங்கள் குறைவடைந்தமையுமே இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| ------------------- | ------------- | ------------- | ------------- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| | (000) | (000) | (000) |
| வீதவரியும் வரியும் | 2,776 | 6,736 | 2,195 |
| வாடகை | 967 | 870 | 197 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 730 | 858 | 14 |
| ஏனைய வருமானம் | 12,650 | 7,551 | 1,850 |

**2.3.2 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்**

**---------------------------------------------**

மீளாய்வாண்டின் வீதவரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம், மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமான அதிகரிப்பைக் காண்பித்த போதிலும், வீதவரி வருமானம், சேவைக்கான கட்டணம், ஆணைச்சீட்டு மற்றும் தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானத்தில் மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் குறைவு காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் படி, ஒட்டுமொத்த வருமானச் சேகரிப்பில் 19.72 சதவீத குறைவு காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3.3 வீதவரி**

**----------**

பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் ரூபா 300 வைப் பார்க்கிலும் கூடுதலான 1101 நிலுவை வீதவரி அலகுகள் காணப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 1,501,914 ஆகக் காணப்பட்டது.

**2.3.4 வாடகை**

**--------**

பின்வரும் அவானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெலிகபொல வாராந்த சந்தை மற்றும் மீன் பலகைகளின் வாடகையாளர்களிடமிருந்து முறையே ரூபா 3,828 தொகையும் ரூபா 43,500

தொகையுமாக ரூபா 47,328 கூட்டுத்தொகையான வருமானம் 2014 ஆம் ஆண்டிற்காக பெறப்பட்டிராததுடன் தண்டப்பணமாக முறையே ரூபா 31,920 தொகையும் ரூபா 32,760 தொகையுமாக ரூபா 64,680 தொகையான அவ் வருமானம் அறவிடப்படுவதற்காக இணக்கப்படுத்தல் சபைக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2009, 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தாக சபையிடம் இருந்த வாராந்த சந்தை மற்றும் மீன் பலகைகளுக்கு உரித்தாக ரூபா 52,090 தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. இதில் ரூபா 33,190 தொகையான நிலுவையான நபர்களுக்காக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

---------------------------------------------------

சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வியாபாரம் தொடர்பான மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு பதிவு செய்யப்பட்டு அந் நிறுவகங்களிடமிருந்து வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படுவதற்குப் பதிலாக இது வரையில் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்தும் நிறுவகங்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டு அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரப் பதிவேட்டில் வரி அறவிடப்படும் வியாபார நிலையங்கள் 2014 ஆம் ஆண்டிற்கான பதிவேட்டின் படி இனங்காணப்படுவதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

நீதவான் நீதிமன்றங்கள் இரண்டின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேச சபை நீதிமன்றத் தண்டப்பண வருமானம் பெறுவதுடன் இதில் ஒரு நீதிமன்றத்தின் மூலம் 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தாக ரூபா 413,374 தொகையான வருமானங்கள் பிரதேச சபை நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 2.3.7 நிலையான மற்றும் தற்காலிக விளம்பரப் பலகைகளின் வருமானம்

-----------------------------------------------------------------------------------------

சகல நிலையான மற்றும் தற்காலிக அறிவித்தல் பலகைககள் தொடர்பான அங்கீகாரம் பிரதேச சபை மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதில்லை எனவும் குறித்த கட்டண அறவீடு மேற்கொள்ளப்படாததாகவும், அலுவலகத்திற்கு வருகை தந்து மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் மாத்திரம் பதியப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்காக 04 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 161,620 தொகையான வருமானம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

## 2.3.8 தொடர்பாடல் கம்பக் கட்டணம்

------------------------------------------------

நகர அபிவிருத்தி, புண்ணிய பூமி அமைச்சுச் செயலாளரின் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் படி, சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இனங்காணப்படாத தொடர்பாடல் கம்பங்கள் இனங்காணப்பட்டு இதற்கான வரித் தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 37,343 தொகையும் ரூபா 51,511 தொகையுமாக ரூபா 88,854 கூட்டுத்தொகையான சபையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்காக ஓய்வூதியத் திணைக்களப் பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், பங்களிப்புத் தொகைக் கொடுப்பனவு அதற்கு உரித்தான உத்தியோகத்தர்கள் மற்றும் காலப்பகுதி தொடர்பான தகவல்கள் கணக்காய்வில் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் மாதத்தின் போது தொழில்நுட்பக் குழுக் கூட்டத்தீர்மானம் இன்றி தலைவரின் அங்கீகாரம் மாத்திரம் ரூபா 951,100 பெறுமதியான ‘‘குரோபா’’ வபையிலான தெரு விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதில் ரூபா

810,000 தொகையான 250 வோட் மற்றும் 125 வோட் வலுவுடைய குரோபா வகையிலான 85 தொகுதி தெரு விளக்குகள் 2014 நவம்பர் 27 ஆம் திகதி கடன்கொடுப்பனவு அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 422,500 பெறுமதியான குரோபா வகையிலான 250 வோட் உடைய 40 தொகுதி தெரு விளக்குகள் மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை பரிந்துரை கருத்திற்கொள்ளப்படாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், இலங்கை மின்சார சபையின் அங்கீகாரம் இன்றி 250 வோட் வலு உடைய தெரு விளக்குகள் 72 இல் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 மார்ச் மாதம் வரையில் 23 தெரு விளக்குகள் சபையால் துண்டிக்கப்பட்டிருந்தன.

(இ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்திக் கடன் நிதியத்தின் மூலம் 9 சதவீத கடன் வட்டி வீதத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 22,837,647 தொகையான கடன் தொகையில் மின்சாரத்தில் இருந்து செயற்படும் வடக்கு ஹுணுவல பெலென்த கந்த நீர்த்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டிற்கு பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 1,218,851 தொகையான போதிலும் வருமானமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை ரூபா 941,782 ஆகக் காணப்பட்டது. மேற்குறித்த நீர்ப்பாசனத் திட்டத்திற்காக மின்சாரப்பட்டியல்களுக்காக மாத்திரம் ரூபா 1,645,857 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்ததுடன் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்களின் சம்பளத்திற்காகச் செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. மேலும், மேற்குறித்த கடன் தொகைக்காக ரூபா 408,516 தொகையான வட்டித் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் தொடர்ந்தும் கடன் தொகைக்கான தவணைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த நீர்த் திட்டத்திற்குத் தேவையான நீரின் அளவு மில மீகந்த நீர்த்திட்டத்தின் மூலம் பெறுக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அத் திட்டம் முறைப்படி செயற்பட்டிராமையால் மின்சக்தியைக் குறைத்துக்கொள்வதற்கும் இதன் மூலம் இடமேற்பட்டிருந்தது.

(ஈ) சபையின் மூலம் 05 நீர் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதுடன், அந் நீர் செயற்திட்டங்களுக்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 3,709,448 ஆகக் காணப்பட்டது. அவ் வருமானத்தில் ரூபா 3,274,311 மாத்திரம் மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்தது. இந் நீர் செயற்திட்டத்திற்காக பிரதேச சபை ரூபா 5,426,515 தொகையான செலவினத்தை ஏற்றிருந்ததுடன் நீர்ச் செயற்திட்டம்

காரணமாக பிரதேச சபை நிதியத்திற்கு ரூபா 1,717,067 தொகையான செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) மாதொல கம்சபா உசாவிவத்த காணியில் ஒரு பகுதி பிரதேச செயலாளரால் பிரதேச சபையால் அளந்து கூறாக்கப்பட்டு வழங்கப்படுவதற்காக 2014 நவம்பர் 17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் செயற்பட்டிருந்த போதிலும் அவ் எல்லை குறிக்கப்பட்டு குறித்த நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்படுவதற்காக சபை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, ரூபா 600,000 தொகையான செலவினத்தில் அக் காணிக்காக தீர்க்கப்படுவதற்கு அமைக்கப்பட்ட வீதியில் அதிகளவு மழை காரணமாக கழுவப்பட்டு பாழடைவிற்கு உட்பட்டிருந்தது.

## 3.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தலைவருக்கு தமது அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்திற்காக ஒன்றிணைந்த படிப்பணம் பெற்றுக்கொள்ள இயலாத போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 73,000 தொகையும், 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 60,000 தொகையுமாக ரூபா 133,000 கூட்டுத்தொகையான பணம் பெறப்பட்டிருந்தது. மேலும், சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்திற்கு வெளியே பயணிப்பதற்காக தமது கடமை அல்லது கடமைகளுக்கான அங்கீகாரம் தொடர்பாக எவ்வித அங்கீகாரமும் இன்றி 2014 ஆம் ஆண்டின் ரூபா 445,675 இற்காக சபை நிதியத்திலிருந்து செலவினம் ஏற்கப்பட்டிருந்ததுடன் அப் பயணங்கள் தொடர்பான தேவைப்பாடு அல்லது அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறே, 2014 ஆம் ஆண்டின் போது சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் பயணங்களுக்காக 146 நாட்களும் சபை அதிகார எல்லைக்கு வெளியே 95 நாட்களுமாக மொத்தம் 241 நாட்கள் ஆண்டின் போது ஒன்றிணைந்த படிப்பணக் கொடுப்பனவாக பெறப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான பிரசித்த விடுமுறை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வார இறுதி தினங்களாக

123 விடுமுறை நாட்களாகக் கருதிய போது ஆண்டின் போது அலுவலகக் கடமைகளுக்காக 01 நாள் மாத்திரம் தங்கியிருந்தமை கண்டறியப்பட்டது.

(ஆ) சபையிடம் இருந்த கப் வண்டியின் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்ட காலத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளர் நாயகம் அல்லது பொதுச் சபையின் அங்கீகாரம் இன்றி 12816 கிலோ மீற்றர்களுக்காக ரூபா 385,500 தொகையான வாடகை வருமானக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், தலைவருக்காக ஒரு மாதத்திற்கு 700 லீற்றர் எரிபொருளுக்காக சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் 2014 யூன், யூலை மாதங்களுக்காக இதற்கு முரணாக 250 லீற்றர்களுக்கு மேலதிக எரிபொருளிற்காக ரூபா 30,300 சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

#### (அ) மல்மி மலை நீர் செயற்திட்டம்

---------------------------------------------

மல்மி மலை நீர் செயற்திட்டம் நேர் உழைப்பு அடிப்படையில் செயற்பட்டிருந்ததுடன், கொள்வனவு நடைமுறையின்றி விலை குறைவாக நிறுவகத்தின் மூலம் எவ்வித அங்கீகாரமும் இன்றியும் தொழில்நுட்ப மதிப்பீடும் இன்றி தர அறிக்கையேனும் பெற்றுக்கொள்ளாது நீர் மீற்றர் 300 உள்ளடங்கலாக பொருட்கள் ரூபா 1,368,975 தொகையான செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. செயற்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக 2014 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்தால் ஏற்கப்பட்ட ரூபா 1,773,390 தொகையான மீளளிப்பிற்காக தலைமை அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த எனினும், கணக்காய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையிலும் அப் பட்டியல்கள் மீளளிக்கப்பட்டிராததுடன் இச் செயற்திட்டத்தின் மூலம் மீளமைக்கப்பபட்ட நீர் தாங்கிகளும் சுத்திகரிக்கப்பட்ட நீர்க் குழாய் முறைமையும் கைவிடப்பட்டிருந்தன. .

**(ஆ) தென் ஹுனுவல பாலத்தின் அருகாமையிலான வீதி**

---------------------------------------------------------------------------------------

தென் ஹுனுவல பாலத்தின் அருகாமையிலிருந்து பஹலவெல வீதி தார் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுவதற்காக ரூபா 1,770,000 தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஓர் குழுவுடன் 03 மாத காலத்திற்காக ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த கைத்தொழில் தொடர்பாக 2015 பெப்ரவரி 13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் படி வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த குறித்த வீதியில் 4" கல் மாத்திரம் இடப்பட்டிருந்தது. குறித்த கைத்தொழிலுக்கு உரித்தான எல்லைக்காக நிலவிய பழைய கைவிடப்பட்ட பக்கச் சுவர் பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் 50 மீற்றர்கள் அளவு நீளத்திற்கும் வீதியின் மேற்பரப்பு 07 மீற்றர்கள் அளவு அகலப்பகுதி ஏரிப்பகுதிக்கு அடித்துச்செல்லப்பட்டிருந்தது.

**(இ) மல்மீ மலை வீதி**

-----------------------------

ரூபா 1,960,000 தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஓர் சங்கத்துடன் 03 மாதகாலத்திற்காக ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்த ஓபநாயக்க பிரதேச சபை செயலகத்திற்கு அண்மையில் 100 மீற்றர் முதல் 01 கிலோ மீற்றர் 400 மீற்றர் வரை மல்மிகந்த வீதி தார் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும் கைத்தொழிலில் 100 மீற்றர் முதல் 700 மீற்றர் வரையான பகுதி பிரதேச மக்களால் இல்லம் அகழப்பட்டு வீதியின் மேற்பரப்பிற்கு பாரிய பாதிப்பு நிலை ஏற்படுத்திய காரணத்தால் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாது கைவிடப்பபட்டு எஞ்சிய பகுதி அபிவிருத்தி செய்யப்படுவதற்காக வைத்துக்கொள்ளப்பட்ட பணம் குறைக்கப்படாது ரூபா 926,722 தொகையான பணம் உடன்படிக்கையிடப்பட்டு சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. சபைக்குரித்தான இவ் வீதிக்கு தொடர்ந்து ஏற்பட்ட பாதிப்பைத் தவிர்ப்பதற்கு 2015 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கந்தகெடிய வீதி**

-------------------------

கந்தகெடிய வீதி அபிவிருத்தி செய்யப்படுவதற்காகவும் கொன்கஸ்தென்ன அகுலியத்த வீதியின் கால்வாய் நிர்மாணிப்பிற்காக முறையே 2014 நவம்பர் 01 ஆம் திகதியும் ஆகஸ்ட் 08 ஆம் திகதிகளில் மூன்று மாத அடிப்படையில் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 498,000 தொகையான

முற்பணம் அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக ஆய்வுத் தினமாகிய 2015 பெப்ரவரி 13 ஆம் திகதி வரையிலும் மேற்குறித்த கைத்தொழிலின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்திட்டத்திலான தாமதம்

------------------------------

2014 ஆம் ஆண்டின் பாதீட்டுத் திட்டத்தின் கீழ் ரூபா 800,000 பெறுமதியான 10 திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 700,000 பெறுமதியான 09 கைத்தொழில்கள் செயற்படுத்தப்படுவதற்கு தவறப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்